| | | |
|---|---|---|
| சாட்சி : DW 1<br>திரு.ராமன்<br>த.பெ. திரு. ராமசாமி | அ.வ.எண்.16/2018 | 23.01.2026 |

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) இவ்வழக்கு வாதி பெயர் என்ன என்றால் செல்லையா. செல்லையாவின் தகப்பனார் பெயர் என்ன என்றால் சிலம்பன். சிலம்பனுக்கும் எனக்கு என்ன உறவுமுறை என்றால் அவர் எனது உடன்பிறந்த அண்ணன். செல்லையா என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், நிலத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2) நான் முன்னதாக நியமித்திருந்த வழக்கறிஞர் பெயர் என்ன என்றால் திரு. M. சிவராஜ். மேற்படி வழக்கறிஞரிடம் தான் இவ்வழக்கிற்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்ய விபரம் கூறினேன் என்றால் சரிதான். எனக்கு படிக்க தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வழக்கறிஞர் எதிர்வழக்குரையை நான் கூறிய விபரங்களின் அடிப்படையில் தயார் செய்து அதை என்னிடம் படித்துக் காண்பித்தாரா என்றால் ஆமாம்.

3) மேற்படி எனது எதிர்வழக்குரையில் வழக்கு சொத்தை நான் அனுபவித்து வருவதாகவும், வழக்கு சொத்திற்கு பட்டா, சிட்டா இருப்பதாகவும், எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், ஆனால் என்னிடம் பட்டா, சிட்டா உள்ளது. இவ்வழக்கு தாக்கல் செய்த காலக்கட்டமான 2018 லோ, அல்லது அதற்கு முன்னரோ, வழக்கு சொத்திற்கு எனது பெயரில் உள்ள பட்டா, சிட்டா, அடங்கல் போன்ற வருவாய் ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் நியாபக மறதியால் தாக்கல் செய்யாமல் விட்டுவிட்டேன்.

4) வாதி செல்லையன் இவ்வழக்கில் வா.சா.1 ஆக சாட்சியம் அளித்து ஒரு வருட காலம் இருக்கும் என்றால் அதற்கு மேலே இருக்கும். வா.சா.1 குறுக்கு விசாரணையிலாவது என் பெயரில் உள்ள பட்டாவை காண்பித்து குறுக்கு விசாரணை செய்யப்பட்டதா என்றால் நியாபக மறதியால் கேட்கவில்லை. எனது எதிர்வழக்குரையில் 7 வது பத்தியில் வழக்கு சொத்து நத்தம் என்பதால் வருவாய் துறையில் எப்போது வேண்டுமானாலும் கையகப்படுத்திக்கொள்ளலாம் என்றும், அவ்வாறு வருவாய் நிலை ஆணையில் உள்ளதால் அதனை தெரிந்து கொண்டோ, வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

5) வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்போ, வழக்கு காலத்திலோ, எனது எதிர்வழக்குரை தாக்கல் செய்த காலத்திலோ, வழக்கு சொத்து எனது சுவாதீனத்தில் இல்லை என்பதாலும், எனது பெயரில் ஆவணங்கள் இல்லை என்பதால் தான், நான் மேற்சொன்னவாறு எனது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து தொடர்பாக வாதிக்கும், எனக்கும் பிரச்சனை ஏற்பட்டபோது வட்டாட்சியர் என்னை இதை பொறுத்து விசாரித்தாரா என்றால் விசாரிக்கவில்லை.

6) அப்படியானால் எனது எதிர்வழக்குரை வட்டாட்சியர் என்னை விசாரித்ததாகவும், வாதி சுவாதீனத்தில் இல்லை என்பதால், அவருக்கு பட்டா வழங்கப்படவில்லை என்று கூறியுள்ளது தவறா என்றால் நான் அப்படி சொல்லவில்லை, அப்படி சொல்லியிருந்தால் அது பொய். தாவா 2 வது அயிட்ட சொத்தை பொறுத்தப்பட்டாவை முன்பு நியாபகம் இல்லாததால் தாக்கல் செய்யாமல் விட்டுவிட்டு, தற்போது பி.சா.ஆ.1

தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.1 பட்டாவானது 22.05.2025 ல் ஏற்படுத்தப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

7) அப்படியானால் பி.சா.ஆ.1 பட்டா எவ்வாறு ஏற்படுத்தப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் தெரியாது. பி.சா.ஆ.1 பட்டா எந்த குறிப்பு மற்றும் கோப்புகளின் அடிப்படையில் விசாரணை செய்யப்பட்டு எந்த உத்தரவின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது என்ற விபரம் பி.சா.ஆ.1 ல் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பி.சா.ஆ.1 பட்டாவை 18.06.2025 ல் பதிவிறக்கம் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியாது.

8) எனவே பி.சா.ஆ.1 முறையாக விசாரணை செய்யப்பட்டு, வட்டாட்சியரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, ஏற்படுத்தப்பட்டதா என்பதை வட்டாட்சியரை கொண்டு நானே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றாலும், அதை நிரூபிக்க தயாராக உள்ளேனா என்றாலும் தயாராக உள்ளேன். வாதியை விசாரணை செய்யாமல், வழங்கப்பட்ட பி.சா.ஆ.1 பட்டா மோசடியானது, உற்பத்தி செய்யப்பட்டது, சட்டப்படி ஏற்படுத்தப்பட்டதல்ல என்றால் சரியல்ல.

9) எனக்கு வட்டாட்சியர் அலுவகலகம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து வாதி கொடுத்த மனுவின் பேரில் விசாரணைக்கு வரசொல்லி அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் அறிவிப்பு வரவில்லை. 02.04.2009 காலக்கட்டத்திலேயே வாதி கொடுத்த மனுவின் பேரில் வருவாய் கோட்டாட்சியர் என்னை விசாரித்தார் என்றால் சரியல்ல. எனக்கு வாதி கொடுத்த மனு விபரம் தெரியும் என்றால் சரியல்ல, தெரியாது.

10) வழக்கு சொத்துக்களை பொறுத்து எனது தந்தைக்கும், வாதியின் தந்தைக்கும் பாகம் பிரிப்பதற்கு முன்னர் அதனை எனது தாத்தா சிலம்பன் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். எனது தந்தைக்கும், வாதியின் தந்தைக்கும் எனது தாத்தா சிலம்பன் மூலம் தான் சொத்துக்கள் கிடைத்தது என்றால் சரிதான். எனது தந்தை ராமசாமி, த.பெ.சிலம்பன் வழக்கு சொத்துக்களை பொறுத்து வாதி செல்லையனுக்கு 18.04.1990 லேயே வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தை அவரது ஆயுட்காலத்தில் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல.

11) வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் உள்ள 3 வது சாட்சி கையொப்பம் என்னுடையது என்றால் சரியல்ல, எனது பெயர் ராமன் தான், ஆனால் அது என்னுடைய கையொப்பம் அல்ல. அப்படியானால் எதிர்வழக்குரையில் உள்ள எனது கையொப்பத்தையும், வா.சா.ஆ.1 ல் உள்ள கையொப்பத்தையும் பரிசோதனைக்கு அனுப்பலாம் என்றால் அனுப்பலாம். வழக்கு சொத்து உள்ள புல எண்.189/12A4, 189/15A2 ன் முந்தைய புல எண்.203/1 ல் கட்டுப்பட்டது என்றால் சரியல்ல.

12) எனது தந்தை வழக்கு சொத்தை பொறுத்து வாதிக்கு உயில் ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்த பிறகு வழக்கு சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி உயில் ஆவணத்தின்படி வாதிக்கு கிடைத்த சொத்தை பொறுத்த பட்டா தவறுதலாக வருவாய் துறையில் பதிவு செய்யப்பட்டுள்ளதால், அதனை சரிசெய்யவே வாதி வருவாய் துறையில் நடவடிக்கை மேற்கொண்டு, பின் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

13) ராமசாமி எப்போது இறந்தார் என்றால் 1996–1997 வாக்கில் இறந்துபோனார், இறப்பு சான்றிதழ் என்னிடம் உள்ளது. 2017 ல் எனக்கும், வாதி குடும்பத்திற்கும் கோழிக்கு விசம் வைத்தாக பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். அதன் பிறகு தான் எங்களது சொத்தை வாதி அனுபவிக்க கூடாது என்று வழக்கு சொத்து பொறுத்து பிரச்சனை ஏற்பட்டது என்றால் நான் அப்போது தான் வழக்கு சொத்தை பொறுத்து என்னிடம் பட்டா, சிட்டா உள்ளதாக கூறினேன்.

14) மேற்படி பிரச்சனையின் போது வழக்கு சொத்தில் உள்ள வேலியை பிடிங்கி வாதியின் அனுபவத்திற்கு இடையூறு செய்ததால் தான் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் வேண்டுமென்றே வழக்கு சொத்திற்கான பட்டா வாதி பெயரில் ஏற்படக்கூடாது என்பதற்காக பொய்யான வாக்குமூலங்களை கொடுத்து பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல.

15) வழக்கு சொத்து வாதிக்கு தான் என்பதை ஏற்றுக்கொண்டு நான் வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் கையொப்பம் செய்துவிட்டு, முன் விரோதம் காரணமாக தற்போது உயில் ஆவணத்தை மறுத்து பொய்யாக கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கு முன்பும், தற்போது வரையிலும் வழக்கு சொத்துக்களை வாதியே அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல.

16) நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.2,3 வீட்டுவரி ரசீதுகள் வழக்கு சொத்திற்குரியது அல்ல என்றால் சரியல்ல. எங்கள் ஊரை சேர்ந்த மருதை மகன் மூக்கன் என்பவர் உயிருடன் உள்ளார் என்றால் இல்லை, இறந்துவிட்டார். அதுபோல அயினான் மகன் கந்தசாமி என்பவர்

உயிருடன் உள்ளார் என்றால் இல்லை, இறந்துவிட்டார். மேற்படி இரு நபர்களும் வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளனர் என்றால் சரியல்ல.

17) வாதி உண்மை விபரங்களை குறிப்பிட்டு வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் இருந்ததால் தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், நான் சொல்வது போல் வழக்கு சொத்தின் சுவாதீனத்தில் நான் இருந்திருந்தால், எனது எதிர்வழக்குரையிலேயே அதனை குறிப்பிட்டு அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/– ப. கோபாலஅரசி,

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.
இலால்குடி.

/உண்மை நகல்/

P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.